செ.வெ.எண்: 788/2016 நாள்: 09.11.2016

**படித்த மற்றும் தொழில்பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கான மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்**
**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 2016-2017-ஆம் ஆண்டில் படித்த வேலை இல்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை பெற்று தரும் பொருட்டு மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் 12.11.2016 அன்று எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவிலில் வைத்து காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இம்முகாமில் உள்ளூர் மற்றும் சென்னை, திருவனந்தபுரம், பெங்களூரு போன்ற பெருநகரங்களிலிருந்து பல்வேறு நிறுவனங்கள் கலந்து கொண்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க உள்ளனர்.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நாகர்கோவில் நகராட்சி பகுதிகளை சார்ந்த 8-ஆம் வகுப்பு முதல் தொழிற்பயிற்சி (ITI), பட்டப்படிப்பு, டிப்ளமோ இன் பார்மஸி, நர்சிங், அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை (கலை அறிவியல் மற்றும் பொறியியல்) வரை படித்த 40 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் இருபாலரும் தங்களது கல்விசான்றிதழ், சாதிசான்றிதழ், குடும்பஅட்டை, இதர தகுதிசான்று (அசல் மற்றும் நகல்) மற்றும் புகைப்படங்களுடன் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**அலுவலக முகவரி:**

திட்ட இயக்குநர்,
மகளிர் திட்ட அலுவலகம்,
பூமாலை வணிக வளாகம்,
வடசேரி பேருந்து நிலையம் அருகில்,
நாகர்கோவில் - 1.
தொடர்புக்கு: 04652___272275, 04652___272449.

மின்னஞ்சல்: dpiu_kki@yahoo.com

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.